DEPOSITION OF THE WITNESS

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண். CC.8/2025

**prosecution witness: LW–10 as PW–8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முருகேசன் | பதவி | : | காவல் ஆய்வாளர் விருதுநகர் மேற்கு காவல் நிலையம். |
| த/பெ. | : | கோவிந்தன் | வயது | : | 56 |
| ஊர் | : | விருதுநகர் | சமயம் | : | இந்து |

(Solemnly Affimed in Accordance with provision of oath's act 1969)

<u>16.02.2026</u>

( 1 முதல் 8 எதிரிகள் திருச்சி சிறப்பு முகாமில் இருந்து நீதிமன்றத்தில் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர், )

**<u>முதல் விசாரணை:–</u>**

1. நான் தற்போது விருதுநகர் மாவட்டம் விருதுநகர் மேற்கு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு இராமநாதபுரம் கோவில் காவல் நிலையத்தில் வட்ட ஆய்வாளராக பணிபுரிந்த போது 25.11.2024 ம் தேதி தனுஷ்கோடி கா.நிலைய சார்பு ஆய்வாளர் அவர்கள் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை குற்ற எண் 82/2023 சட்டப்பிரிவு 14 சி Foreigners act மற்றும் 3(a), 6(a), Passport Act entry into India Rule ன்கீழ் பதியப்பட்ட வழக்கு கோப்பினை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு இவ்வழக்கின் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின் நீதிமன்ற PR No. பெற்று 25.10.2024 ம் தேதி எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படங்களில் உள்ள 4 படகுகள்தான் என்னால் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டதாகும். (**அந்த 4 படகுகள் அ.சா.பொ. 1 முதல் அ.சா.பொ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னால் தயார் செய்யப்பட்ட அத்தாட்சி மற்றும் படிவம் 91 அ.சா.ஆ.9 மற்றும் அ.சா.ஆ.10 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**) என்னால் ஜிபிஎஸ் கருவிகள் மற்றும் செல்போன்களை பார்த்தால் அடையாளம் காட்ட இயலும்.

**<u>எதிரிகள்தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. சாட்சி தாரிக்குல் அமீன் சார்பு ஆய்வாளர் அவர்களது விசாரணையில் வாக்குமூலம் பெறும்போது இந்திய கடலோர காவல் படையினர் பலபிரயோகம் உட்படுத்தி எதிரிகளை பிடித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்

சரிதான் வாக்குமூலம் என்னால் பதிவு செய்யப்படவில்லை. இந்த வழக்கு எனது விசாரணைக்கு எந்த தேதியில் வந்தது என்றால் 25.11.2023ம் தேதி. புகாரில் எதிரிகளின் பெயர்களை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகஜரில் நவநீதன் என்பவரிடமிருந்துதான் கைப்பற்றப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல எதிரிகள் அடையாளம் காட்டிய சொத்துக்களை கைப்பற்றியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றப்பட்ட பொருட்களில் தடை செய்யப்பட்ட பொருட்கள் ஏதும் கிடையாது என்றால் சரிதான். ஆனால் தடைசெய்யப்பட்ட பொருட்கள் 330 கிலோ கடல் அட்டைகள் 594 கிலோ மஞ்சள் என்று முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தடை செய்யப்பட்ட பொருட்கள் தற்போது எங்குள்ளது என்றால் எங்களிடம் ஒப்படைக்கவில்லை. எங்கு உள்ளது என்று தெரியாது. தனிநபர் முன்னிலையிலோ, வருவாய்துறை அலுவலர்கள் முன்னிலையிலோ எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். ஆனால் 1059 கருணாநிதி, 3301 குமார் தலைமை காவலர் ஆகியோர்கள் முன்னிலையில் கைப்பற்றப்பட்டதாக ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2. மேற்படி பொருட்களை கைப்பற்றப்படும்போது எதிரிகள் சிறைச்சாலையில் இருந்தார்கள் என்றால் சரிதான். எதிரிகள் யாரும் பொருட்களை அடையாளம் காட்டி கைப்பற்றவில்லை என்றால் சரிதான். நான் கடலோர காவல்படையினரிடம் இருந்து மேற்படி பொருட்களை நடைமுறைக்காக கைப்பற்றினோம். நான் எந்த சாட்சியையும் விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரியல்ல. நான் சார்பு ஆய்வாளர் ஷாகித் மற்றும் ஆய்வாளர் கனகராஜ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மண்டபம் மெரைன் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட வழக்கு ஆவணங்கள் அடிப்படையில்தான் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். குற்ற இறுதி அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள சட்டப்பிரிவுகளுக்கு ஏற்ப எந்த சாட்சிகளையும் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். இராமநாதபுரம் எஸ்.பி. அவர்களின் உத்தரவின்பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

3. நான் சொல்வதுபோல் சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில்

எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும் வழக்கு ஆவணங்களை அனைத்தும் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டவை என்றாலும் சாட்சிகள் யாரையும் முறையாக விசாரணை செய்யவில்லை என்றாலும் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எதிரிகளை கைது செய்யவில்லை என்றாலும் புள்ளிவிபரத்திற்காக போடப்பட்ட பொய்யான வழக்கு என்றாலும் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.02.16 10:20:10 +0530